No. of Printed Pages : 3 **BESE-046**

00658

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## June, 2013

## BESE-046 : தமிழ் கற்பித்தல்

## (TEACHING OF TAMIL)

*Time : 3 hours* *Maximum Weightage : 70%*

குறிப்பு :

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ii) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். 15

படிப்பு என்றால் என்ன ? சொர்களஞ்சியம் என்றால் என்ன ? மொழி கற்றலில் ஒருவர் தக்க தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதை எவ்வெவ்வகைகளில் அறியலாம் ? மாணவர் தம் சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் வழிமுறைகள் யாவை ?

அல்லது

கற்பித்தலில் தேர்வு பெறும் இடத்தையும், அதன் பயனையும் விளக்கி, தேர்வின் இன்றியமையாமைப் பண்புகளை விளக்குக.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15**

தாமஸ் நன் என்பவரின் கல்வி கோட்பாட்டினை விளக்குக. இம்முறை தமிழ் கற்பித்தலில் எந்நிலைக்கு உகந்தது என்பதனைக் காரணங்களுடன் விளக்கி, இதன் நிறைகுறைகளை ஆய்க.

**அல்லது**

வாய் மொழிப் பயிற்சிதரும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டிய இயல்புகள் யாவை ? நல்ல பேச்சின் தேவையையும் நன்மைகளையும் பட்டியல் இடுக.

3. கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் 4 வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **4x5=20**

(a) பாடக்குறிப்பு எங்ஙனம் இன்றியமையாதது ? பாடக்குறிப்பின் உட்கூறுகளை விளக்குக.

(b) செய்யுள் கற்பிக்கும் முறைகளை கூறுக. வகுப்பறையில் நீவிர் கையாண்ட ஏதேனும் இரு முறைகளை விளக்குக.

(c) வினாக்களின் நோக்கங்கள் யாவை ? நல்ல வினாக்களின் பண்புகள் யாவை ?

(d) வினாத்தாள் வடிவமைப்பு என்றால் என்ன ? அதன் பயன்கள் யாவை ?

(e) பாட நூல்களின் வகைகளைக் கூறுக. நல்ல பாட நூல்களின் பண்புகள் யாவை ?

(f) நடிப்பு முறையினை விளக்கி, கற்பித்தலுக்கு நடிப்புமுறை எவ்வழி-களில் துணை புரிகிறது என்பதை விளக்கவும்.

(g) உ. வே. சாமிநாத ஐயரின் தமிழ்த் தொண்டு.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு **600** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **20**

மொழியின் எழுத்துக்களை கற்றுக் கொடுக்கும் முறையினையும் கேட்டு எழுதுதலின் திறனை வெளிக் கொண்டு வரும் வகையில் உம் வகுப்பின் நீவிர் எவ்வாறு கற்பித்தீர்கள் என்பதையும் விளக்கவும்.